islamhouse.com

# இஸ்லாமியப் பெண்ணுக்கு ஒரு நூல்

## المرأة المسلمة

## باللغة التاميلية


أعدها: شعبة توعية الجاليات بالزلفي

Isinalin ng: Zulfi Foreigners' Guidance Office

P.O. Box: 182 Zulfi 11932

Saudi Arabia

Tel.: 06 4225657

Fax: 00966 4224234

**இஸ்லாத்தில் பெண்கள் நிலை**

இஸ்லாத்தில் பெண்களுக்கிருக்கிற உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு முன் பெண்களை மற்ற சமூகத்தினர் எப்படி நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

கிரேக்கர்கள் பெண்களை வியாபாரப் பொருட்களாகவே கருதினர். அவர்களுக்கென எந்த உரிமையும் கிடையாது. உரிமைகள் அனைத்தும் ஆண்களுக்கே என்றனர். இன்னும் அப்பெண்களுக்குச் சொத்துரிமை, கொடுக்கல், வாங்கல் போன்ற உரிமைகள் தடுக்கப் பட்டிருந்தன. அவர்களில் பிரபல்யமான தத்துவஞானியான சாக்ரடீஸ் என்பவன் பெண்க ள் இருப்பது உலகின் வீழ்ச்சிக்கு மிகப்பெரும் மூல காரணமாகும். மேலும் பெண்கள் விஷ மரத்திற்கு ஒப்பானவர்கள். அம்மரத்தின் புறத் தோற்றம் அழகாக இருக்கும். எனினும் அத ன் கனிகளை சிட்டுக்குருவிகள் தின்றவுடனேயே இறந்துவிடுகின்றன என்று கூறியுள்ளான்.

ரோமானியர்கள் பெண்களை உயிரற்ற ஒரு பொருளாகவே கருதி வந்துள்ளனர். அவர் களிடம் பெண்களுக்கு எந்த மதிப்பும் உரிமையும் இருந்ததில்லை. பெண்கள் உயிரற்ற பொருளாகக் கருதப்பட்டதால்தான் அவர்களைக் கொதிக்கின்ற எண்ணெயை ஊற்றியும், தூண்களில் கட்டியும் வேதனை செய்தார்கள். இதுமட்டுமின்றி குற்றமற்ற பெண்களை குதி ரைகளின் வால்களில் கட்டி அவர்கள் மரணித்து போகின்ற அளவிற்கு மிக விரைவாக ஓட் டிவிடுவார்கள்.

பெண்கள் விஷயத்தில் இந்தியர்களின் கண்ணோட்டமும் இவ்வாறுதான் இருந்துள்ளது. அவர்கள் இன்னும் ஒருபடி அதிகமாக கணவன் இறந்துவிட்டால் அவனின் சிதையுடன் மனைவியையும் எரித்து விடுபவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

சீனர்கள் பெண்களை நற்பாக்கியத்தையும் செல்வங்களையும் அழித்துவிடக்கூடிய தண் ணீருக்கு ஒப்பாக்கினர். அவர்கள் தம் மனைவியரை உயிரோடு புதைத்து விடுவதற்கும் விற்றுவிடுவதற்கும் உரிமை பெற்றிருந்தனர்.

பெண்கள் சாபத்திற்குரியவர்களென யூதர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் அவள் தான் ஆதம்(அலை) அவர்களை வழிகெடுத்து மரக்கனியை சாப்பிடச் செய்துவிட்டாள். மேலும் பெண்ணுக்கு மாதவிடாய் வந்துவிட்டால் அவள் அசுத்தமானவள், வீட்டையும் அவள் தொ டும் பொருளையும் அசுத்தப்படுத்திவிடக்கூடியவள் எனவும் கருதுகிறார்கள். பெண்ணுக்குச் சகோதரர்களிருந்தால் அவள் தன் தந்தையின் சொத்தில் சிறிதும் உரிமை பெறமாட்டாள் எனவும் கருதுகிறார்கள்.

கிறிஸ்தவர்கள் பெண்களை ஷைத்தானின் வாசலாகக் கருதுகிறார்கள். கிறுத்தவ அறி ஞர்களில் ஒருவர் பெண் மனித இனத்தைச் சார்ந்தவளல்ல எனக் கூறினார். இன்னும் புனி

த பூனபெஃன்தூரா என்பவன் கூறினான்: “நீங்கள் பெண்களைக் கண்டால் அவளை மனி த இனத்தைச் சார்ந்தவள் எனக் கருதிவிடாதீர்கள். அது

மட்டுமல்ல அவளை ஒரு உயி ருள்ள ஜீவனாகக் கூட கருதாதீர்கள். மாறாக நீங்கள் காண்பது நிச்சயமாக ஷைத்தானி ன் உருவத்தைத்தான். இன்னும் நீங்கள் செவியேற்கும் அவளது சப்தம் பாம்பின் சீற்றம் தான்”

மேலும் கடந்த (19ஆம்) நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஆங்கிலேயே பொதுச் சட்டப்படி பெண்கள் பிரஜா உரிமை கொடுக்கப்படாதவர்களாக இருந்தனர். இதுபோன்றே பெண்களு க்கென எந்த தனிப்பட்ட உரிமைகளும் கிடையாது. இன்னும் அவள் அணியும் ஆடை உட் பட எந்தப் பொருளையும் சொந்தப்படுத்திக் கொள்வதற்கும் உரிமையில்லை. 1567 ஆம் ஆண்டு ஸ்காட்லண்ட் பாராளுமன்றம் பெண்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக்கூடா தென சட்டம் இயற்றியது. இவ்வாறே எட்டாவது ஹென்றியின் காலத்தில் ஆங்கிலேயப் பா ராளுமன்றம் பெண்கள் அசுத்தமானவர்கள் என்பதால் இன்ஜீலைப் படிக்கக் கூடாதென சட்டம் இயற்றியது.

பிரஞ்சுக்காரர்கள் 586 ஆம் ஆண்டில் பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்களா? இல்லையா? என ஆய்வு செய்து முடிவெடுக்க ஒரு சபையை அமைத்தனர். அச்சபை பெ ண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்கள்தான். எனினும் அவர்கள் ஆண்களுக்குப் பணிவி டை செய்வதற்காகவே படைக்கப்பட்டவர்களென முடிவு செய்தது. 1805-ம் ஆண்டு வரை ஆங்கிலேயரின் சட்டத்தில் ஒரு கணவன் தனது மனைவியை விற்பது கூடுமென்றே இருந் துள்ளது. மனைவியின் விலை ஆறு பெனி (அரை ஷிலிங்) என நிர்ணயமும் செய்யப்பட்டது. (பெனி, ஷிலிங் 'நலெலெஇ ளஉாடைடலைபெ என்பது ஆங்கிலேய நாணயத்தின் பெயர்கள்)

இஸ்லாத்திற்கு முன்பு வரை அரேபியர்களிடத்தில் பெண்கள் இழிந்த பிறவிகளாக இரு ந்தனர். அவளுக்கு சொத்துரிமை கிடையாது. அவர்களை ஒரு பொருட்டாகக் கருதப்பட மாட்டாது. அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. மட்டுமல்லாமல் அவர்களில் பெரும் பாலோர் தம் பெண்மக்களை உயிருடன் புதைப்பவர்களாக இருந்திருக்கின்றனர்.

இவ்வனைத்து அநியாயங்களைப் பெண்களை விட்டும் நீக்கவும் நிச்சயமாக ஆண்களு ம் பெண்களும் சமமானவர்கள்தான் என விளக்கவும்தான் இஸ்லாம் வந்தது. எனவே ஆண்களுக்கு உரிமைகளிருப்பது போல் பெண்களுக்கும் உரிமைகளிருக்கின்றன.

அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், பெண்ணி லிருந்தே படைத்தோம். பின்னர் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைப் பல கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் எவர் மிக பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ அவர் தாம் அல்லாஹ்விடத்தில் மிக்க கண்ணிய மானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், யாவற்றையும் சூழ்ந்தறிபவன். (49:13) ஆண் அல்லது பெண் ஈமான் கொண்ட நிலையில் நற்கருமங்கள் செய்தால் அவர்கள் சுவனத்தி ல் நுழைவார்கள். சிறிதளவும் அநீதமிழைக்கப்பட மாட்டார்கள். (4:124) மனிதன் தன் பெற் றோருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென நாம் அறிவுறுத்தியுள்ளோம். (46:15)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஃமின்களில் பூரண ஈமானுடையவர்கள் அவர்களில் அழகிய குணமுடையவர்களே. தனது மனைவியிடத்தில் சிறந்தவரே உங்களில் சிறந்தவர். நபி(ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து மனிதர்களில் நான் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டியவர் யார்? எனக் கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் உனது தாய் எனக் கூறினார்கள். பின்பு யார்? எனக் கேட்டார். நபி(ஸல்) அவர்கள் உ னது தாய் எனக் கூறினார்கள். பின்பு யார்? எனக் கேட்டார். உனது தாய் என்றே கூறினார்கள். பின்பு யார்? எனக் கேட்டார். உனது தந்தை எனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

இது பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் சுருக்கமான கண்ணோட்டமாகும்.

பெண்களுக்குரிய பொதுவான உரிமைகள்

நிச்சயமாக பெண்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய பொதுவான உரிமைகள் உ ள்ளன. அவற்றை அவள் விரும்பும்போது பூரணமாகச் செய்து கொள்வதைச் சமூகம் அங் கீகரிக்கவும் செய்கின்றது. அவ்வுரிமைகள் வருமாறு:

1- சொந்தமாக்கிக் கொள்ளல்: வீடுகள், விவசாய நிலங்கள், தோட்டங்கள், வெள்ளி, தங்கம், கால்நடை வகைகள் இவற்றில் விரும்பியவற்றை ஒரு பெண் தனக்கு சொந்தமா க்கிக் கொள்ளலாம். அப்பெண் தாயாக அல்லது மகளாக அல்லது சகோதரியாக இருப்பி னும் சரி.

2- திருமணம் செய்வது, கணவனைத் தேர்வு செய்வது, தனக்கு விருப்பமில்லாதவனை ஏற்கமறுப்பது, தனக்கு இடையூறு ஏற்பட்டால் திருமண ஒப்பந்தத்தை முறித்துக் கொள் வது போன்றவற்றிலும் அவள் உரிமை பெறுகிறாள். இவை பெண்களுக்குரிய உரிமைகள் என்பதில் ஏகமனதான முடிவாகும்.

3- தனக்கு அவசியமானவற்றைக் கற்றுக் கொள்தல்: உதாரணமாக அல்லாஹ்வை அறி வது, அவனுக்குச் செய்ய வேண்டிய வணக்கங்களையும் அதை நிறைவேற்றும் முறையை யும் அறிவது. இன்னும் தன்னுடைய கடமைகளையும் தனக்குத் தேவையான ஒழுக்கங்க ளையும் தான் கடைபிடிக்க வேண்டிய சிறந்த பண்பாடுகளையும் அறிவது. ஏனெனில் வண க்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதை நீ அறிந் துகொள். (47:19) என அல்லாஹ்வும், கல்வியைத் தேடுவது ஆண், பெண் அனைவர் மீதும் கடமையாகும் (இப்னுமாஜா) என நபி(ஸல்) அவர்களும் பொதுவாகவே சொல்லியிருப்பதால்.

4- செலவு செய்தல்: தனது பொருளில் தான் நாடியதைத் தர்மம் செய்து கொள்வதற்கும், தனக்கும் தனது கணவன், பிள்ளைகள், தாய், தந்தையர்கள் இவர்களில் தான் விரும்பிய வர்களுக்கு வீண், விரயமில்லாத அளவுக்கு செலவு செய்து கொள்வதற்கும் உரிமை பெறு கிறாள். இவ்விஷயத்தில் இவர்களும் ஆண்களைப் போன்று தான்.

**5-** விருப்பு, வெறுப்புக் கொள்தல்: அவள் நல்ல பெண்களை விரும்பவும், அவர்களைச் சந் திக்கவும், அன்பளிப்புகள் வழங்கவும் செய்யலாம். இன்னும் அவர்களுக்குத் தபால்கள் அனுப்பி அவர்களின் நிலைமைகளைக் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். கஷ்டகாலங்களில் அவர்களுக்கு ஆறுதலும் சொல்லிக் கொள்ளலாம். அல்லாஹ்விற்காக கெட்ட பெண்களை வெறுத்து, அவர்களை விட்டும் ஒதுங்கிவிடுவதும் கூடும்.

**6-** மரணசாசனம்: அவளின் சொத்தில் மூன்றில் ஒன்றை அவளது ஜீவிதகாலத்தில் மரண சாசனம் எழுதிக் கொள்வதற்கும் அதை எவ்வித ஆட்சேபணை செய்யாமல் செயல்படுத்து வதும் அவளது உரிமைகளிலுள்ளதாகும். ஏனெனில் மரணசாசனம் எழுதுவதென்பது பொதுவான மனித உரிமைகளைச் சார்ந்ததாகும். எனவே இது ஆண்களுக்கிருப்பது போ ன்று பெண்களுக்குமிருக்கிறது. ஏனெனில் அல்லாஹ்விடம் நன்மையைப் பெறுவதை விட் டு யாரும் யாரையும் தடுக்க முடியாது. என்றாலும் மரணசாசனம் மூன்றில் ஒரு பகுதியை விட அதிகமாகாமலிருப்பது நிபந்தனையாகும். இதில் ஆண்களும் பெண்களும் சமமே.

**7-** பட்டாடை, தங்கம் அணிதல்: பட்டையும், தங்கத்தையும் பெண்கள் அணிந்து கொள் வது கூடும். இவ்விரண்டும் ஆண்களுக்கு ஹராமாகும். ஒரு பெண் தனது கணவனுக்காக ஆடைகளைக் கழற்றி நிர்வாணமாக இருப்பதும், அரை ஆடை, கால் ஆடை அணிந்து கொள்வதும் தலை, கழுத்து, மார்பு முதலியவற்றை தனது கணவனுடன் மட்டுமிருந்தால் திறந்து கொள்ளலாம்.

**8-** அலங்கரித்துக் கொள்ளல்: தனது கணவனுக்காக தன்னை அலங்கரித்துக் கொள்ள உரிமை பெறுகிறாள். எனவே அவள் சுர்மா இட்டுக்கொள்ளவும் விரும்பினால் இரு கன்ன ங்களிலும் உதடுகளிலும் சிகப்புச்சாயம் வைத்துக் கொள்ளவும் செய்யலாம். மிக அழகிய அணிகலன்கள் அணிந்து கொள்ளலாம். எனினும் முஸ்லிமல்லாத மற்றும் தவறான நடத் தையுள்ள பெண்களுக்கே உரிய ஆடைகளை அணியக்கூடாது. இவற்றை அவள் அணியக் கூடாது என்பது சந்தேகம் தவறுகளிலிருந்து தூரமாகுவதற்காகவே.

**9-** உண்பது, குடிப்பது: நல்ல, சுவையான பானங்களை பருகவும் அதுபோன்ற உணவுக ளை உண்ணவும் அவளுக்கு உரிமையுண்டு. உண்பதிலும் குடிப்பதிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மத்தியில் எந்தப் பாகுபாடுமில்லை. இவ்விரண்டில் ஆண்களுக்கு அனுமதி க்கப்பட்டுள்ள அனைத்தும் பெண்களுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகிறா ன்: உண்ணுங்கள் பருகுங்கள் ஆனால் வீண்விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக வீண்விர யம் செய்பவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை (7:31) இங்கு இருபாலாரையும் நோக்கியே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**கணவன் மீது மனைவிக்குரிய கடமைகள்**

ஒரு பெண்ணுக்கு அவளது கணவன் செய்ய வேண்டிய சில குறிப்பிட்ட கடமைகளிருக் கின்றன. இக்கடமைகள் தனது கணவனுக்கு அவள் செய்ய வேண்டிய சில குறிப்பிட்ட கட மைகளுக்குப் பகரமாகிவிடுகின்றன.

அவை அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாற்றமில்லாக் காரியங்களில் கணவனு க்கு கட்டுப்பட்டு நடப்பது, அவன் உண்பதற்கும் பருகுவதற்கும் தயார் செய்து கொடுப்ப து, அவனது படுக்கையைச் சீராக வைத்துக்கொள்வது, அவனது குழந்தைகளுக்குப் பா லூட்டுவது, அவர்களை வளர்ப்பது, அவனது பொருளையும் மானத்தையும் பாதுகாப்பது, தனது கற்பைப் பாதுகாத்துக் கொள்வது, அனுமதிக்கப்பட்ட வகைகளில் அவனுக்காக தன்னை அலங்கரித்துக் கொள்வது, அழகுபடுத்திக் கொள்வது போன்றவைகளாகும். இவை ஒரு பெண் அவளது கணவனுக்குச் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகளிலுள்ள வையாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: மனைவியர் மீது கணவர்களுக்கு உள்ள உரிமைகளைப் போல வே முறைப்படி கணவர்கள் மீது மனைவியருக்கும் உரிமையுண்டு (2:228)

முஃமினான பெண் இவற்றை அறிந்து எவ்வித நாணமும் பயமுமின்றி இவ்வுரிமைகளைக் கேட்டுப் பெறவேண்டும் என்பதற்காக இவற்றைக் கூறுகிறோம். இவைகளில் சிலவற்றை அவள் மன்னித்துவிட்டாலான்றி கணவன் இவைகளை முழுமையாக மனைவிக்கு வழங்குவ து கடமை. அவள் விட்டுக்கொடுப்பதும் கூடும்.

1- அவன் தனது வசதி, ஏழ்மை நிலையைக் கவனித்து அவளுக்குச் செலவுக்குக் கொடு க்க வேண்டும். ஆடை, உணவு, குடிப்பு, மருத்துவம், தங்குமிடம் இவைகளுக்கான செல வை அவள் பெற்றுக் கொள்வாள்.

2- ஆண், பெண்ணை நிர்வகிக்க வேண்டியவனாகயிருப்பதால் அவளின் மானம், மரியா தை, உடல், பொருள், மார்க்கம் இவை அனைத்திலும் அவளைப் பாதுகாக்க வேண்டும். ஒரு பொருளைப் பாதுகாத்துக் கவனித்து வருவதென்பது அதனை நிர்வகித்து வருபவ னின் பொறுப்பிலுள்ளதாகும்.

3- அவளின் மார்க்க விஷயங்களில் அவசியமானவற்றை அவளுக்குக் கற்றுக் கொடுக்கவே ண்டும். அவனுக்கு இயலாவிட்டால் அல்லாஹ்வின் இல்லங்களிலும், கல்விக்கூடங்களிலும் நடைபெறுகின்ற பெண்களுக்குரிய மார்க்கக் கூட்டங்களுக்குச் சென்றுவர அனுமதியளிக்க வேண்டும். ஆனால் அவ்விடங்கள் குழப்பத்தை விட்டும் பாதுகாப்பானதாக இருப்பதோடு அவனுக்கோ அவளுக்கோ அதில் இடையூறு ஏற்படாமலிருப்பதும் அவசியமாகும்.

4- அவளிடம் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: அவ ர்களோடு நல்லமுறையில் வாழ்க்கை நடத்துங்கள். (4:119)

நல்ல முறையில் வாழ்க்கை நடத்துதல் எனபதில் உடலுறவில் அவளுக்குரிய உரிமை யைக் குறைத்திடாமலிருப்பது, திட்டுவது, இழிவுபடுத்துவது, கேவலப்படுத்துவது போன்ற வற்றால் அவளுக்கு தொல்லை கொடுக்காமலிருப்பது அகியவை அடங்கும். இன்னும் அவ ள் தனது உறவினர்களைச் சந்தித்து வருவதால் குழப்பம் ஏற்படுமென அவன் பயப்படாத போது அவளைத் தடுக்காமலிருப்பதும், அவளுக்கு முடியாத வேலைகளைச் செய்யும்படி சிரமம் கொடுக்காமலிருப்பதும், சொல்லிலும், செயலிலும் அவளுடன் அழகியமுறையில் நட ந்து கொள்வதும் அதில் அடங்கும்.

ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: தம் மனைவியரிடத்தில் சிறந்தவரே உ ங்களில் சிறந்தவர். உங்களில் நான் எனது மனைவியரிடத்தில் சிறந்தவராக இருக்கின் றேன். (திர்மிதி) மேலும் கூறினார்கள்: பெண்களைக் கண்ணியமாக நடத்துபவர்களே நல்லவ ர்கள். அவர்களை இழிவாக நடத்துபவர்கள் தாம் கெட்டவர்கள்.

பர்தா அணிதல்

நிச்சயமாக இஸ்லாம், குடும்பம் வீழ்ந்து, சின்னா பின்னப்பட்டுப் போகாமல் அதைப் பா துகாப்பதில் அக்கறை கொண்டுள்ளது. இதனால் அதைச் சுற்றி ஒழுக்கங்கள் மற்றும் நற் குணங்களாலான உறுதிவாய்ந்த வேலியை எழுப்பியுள்ளது. காரணம் மனிதர்கள் நிம்மதி யாகவும் சமுதாயம் தூய்மையாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக. அச்சமுதாயத்தில் காம உணர்வு தூண்டப்பட முடியாது. காமம் கிளறப்பட முடியாது. இயற்கைச் சூழ்நிலை யைக் கேடுபடுத்திட முடியாது. இன்னும் நிச்சயமாக இஸ்லாம் குழப்பத்தின் பால் இட்டுச் செல்லக் கூடியவற்றைத் தடுப்பதற்காக திரைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆண், பெண் இரு பாலாரும் தம் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளும்படியும் ஏவியுள்ளது.

நிச்சயமாக அல்லாஹ் பெண்ணைக் கண்ணியப்படுத்துவதற்காகவும், இழிவிலிருந்து அவளின் மான மரியாதையை பாதுகாப்பதற்காகவும், குழப்பவாதிகள் மற்றும் தீய எண்ணம் உடையவர்களின் கெடுதியை விட்டும் அவளைத் தூரப்படுத்துவதற்காகவும், கண்ணியத்தி னுடைய விலைமதிப்பை அறியாதவர்களிடமிருந்து அவளைப் பாதுகாத்துக் கொள்வதற்கா கவும், விஷப்பார்வைகளுக்குக் காரணமான குழப்பத்தின் வாசலை அடைத்திடுவதற்காக வும், பெண்ணின் கண்ணியத்தையும் கற்பையும் பாதுகாத்துக் கொள்வதற்காகவுமே பெண் களுக்குப் பர்தாவை மார்க்கமாக்கியுள்ளான்.

இஸ்லாமிய அறிஞர்கள் பெண்கள் தங்களின் இரு முன் கைகளையும் முகத்தையும் தவி ர உள்ள எல்லாப் பாகங்களையும் மூடி மறைத்துக்கொள்ள வேண்டும். இன்னும் அன்னிய ஆண்களின் முன்னிலையில் தனது அழகையும் கவர்ச்சியையும் வெளிப்படுத்தக் கூடாதென ஏகமனதாக

முடிவு செய்துள்ளனர். முகத்தையும் முன் கைகளையும் மறைக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதில் அறிஞர்கள் இரு பிரிவினராக பிரிந்துவிட்டனர். ஒவ்வொரு பிரிவின ரிடத்திலும் தங்களது கருத்திற்கேற்ற ஆதாரங்கள் உள்ளன.

பர்தாவைப் பற்றியும் அதன் அவசியம் மற்றும் அதன் அளவு பற்றியும் ஏராளமான ஆதார ங்கள் வந்துள்ளன. ஒவ்வொரு பிரிவினரும் இந்த ஆதாரங்களில் ஒரு பகுதியை வைத்து ஆதாரம் காட்டியுள்ளனர். தங்களின் கருத்திற்கு மாற்றமாகத் தோன்றக் கூடிய ஆதாரங்க ளைப் பல்வேறு விளக்கங்களைக் கூறி சரிக்கட்டியுள்ளனர்.

அல்லாஹ் கூறுகிறான்: அப்பெண்களிடம் எதையாவது கேட்பதாகயிருந்தால் திரைமறை விலிருந்து கேட்டுக் கொள்ளுங்கள். இதுவே உங்களின் உள்ளங்களுக்கும் அவர்களின் உள்ளங்களுக்கும் தூய்மையானது. (33:53) நபியே! உங்களின் மனைவியரிடத்திலும், உங் கள் பெண்மக்களிடத்திலும் முஃமின்களின் பெண்களிடத்திலும் அவர்கள் தங்களின் தலை முன்றானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக. அவர்களை (கண்ணியமானவர்க ளென) அறிந்து கொள்வதற்கும் அவர்கள் தொல்லைக்கு ஆளாகாமலிருப்பதற்கும் இதுவே மிகவும் ஏற்ற முறையாகும். மேலும் அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் கிருபை மிக்க வனாகவும் இருக்கின்றான். (33:59) (நபியே!) முஃமினான பெண்களிடம் நீர் கூறுவீராக! அவர் கள் தங்களின் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளவேண்டும். தங்களின் வெட்கத்தலங் களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தங்கள் அழகலங்காரத்தை அவற்றில் வெளியே தெரியக்கூடியதைத் தவிர (வேறெதையும்) வெளிக்காட்டலாகாது. இன்னும் தங்கள் முன்றானைகளால் தங்களின் மார்பகங்களை மறைத்துக் கொள்ளட்டும். மேலும் அவர்கள் தங்களின் கணவரிடத்திலே தவிர தங்கள் அழகலங்காரத்தை வெளிப்படுத்த வேண்டாம். (24:31)

நபி (ஸல்) அவர்களின் மனைவியான ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினர்கள்: முஃமினான பெ ண்கள் நபி (ஸல்) அவர்களுடன் பஜ்ருத் தொழுகையில் தங்களை பர்தாத் துணிகளால் மூடி மறைத்துக் கொண்டவர்களாகக் கலந்து கொள்வார்கள் பின்பு தொழுகை முடிந்ததும் தம் வீடுகளுக்குத் திரும்பிச் செல்வார்கள். இருட்டில் அவர்கள் யார் என்றே தெரியாது. மேலும் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது: நாங்கள் நபி (ஸல்) அவ ர்களுடன் இஹ்ராம் கட்டியவர்களாக இருந்தபோது வாகனக்காரர்கள் எங்களைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்கள் எங்களுக்கு நேராக வருகிறபோது பெண்களில் ஒவ் வொருவரும் தம் முகமூடிகளைத் தலைகளிலிருந்து முகங்களின் மீது தொங்கவிட்டுக் கொள்வார்கள். அவர்கள் எங்களைக் கடந்து சென்று விட்டால் முகங்களைத் திறந்து கொள்வோம்.

முதலாவதாக ஹிஜ்ரத் சென்றவர்களின் மனைவியருக்கு அல்லாஹ் கிருபை செய்வா னாக! “தங்களின் முன்றானைகளால் அவர்கள் தங்களின் மார்பகங்களை மறைத்துக் கொள்ளட்டும்...”என்ற வசனத்தை அல்லாஹ் இறக்கிவைத்தபோது தங்களின் துப்பட்டிக ளைக் கிழித்துத் தங்களின்

மார்பகங்களை மறைத்துக் கொண்டார்கள் என்றும் ஆயிஷா (ரலி) கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விஷயத்தில் ஆதாரங்கள் அதிகமாக உள்ளன. பர்தா விஷயத்தில் கருத்து வேறு பாடுகள் இருந்தும் எல்லா உலமாக்களும் குழப்பம் ஏற்படுமென்ற பயமிருக்கிறபோது பெண் தனது முகத்தை மறைப்பது கட்டாயம் என்பதில் ஏகமனதாக முடிவெடுத்திருப்பது போல நிர்ப்பந்தமான நேரங்களில் முகத்தைத் திறந்து கொள்ளலாமென்ற விஷயத்திலும் ஏகமன தாக முடிவு செய்துள்ளனர். பெண்கள் தங்களின் முகங்களைத் திறந்து கொள்வது கூடு மெனச் சொல்லக் கூடியவர்களும் கூட குழப்பம் ஏற்படுமென்ற பயமிருக்குமானால் பெண் கள் தங்களின் முகங்களை மூடிக்கொள்வது கட்டாயமென உறுதியாகக் கூறியுள்ளனர்.

இந்தக் காலத்தில் குழப்பத்தைப் பற்றி எவ்வளவு கடுமையாக அஞ்சவேண்டியிருக்கி றது! குழப்பம் எல்லை மீறியிருக்கிறது. எங்கும் பரவியிருக்கிறது. தீயவர்களோ நிறைந்து போய்விட்டனர். கடைவீதிகளிலும் பல்வேறு இடங்களிலும் அவர்கள் நிரம்பியுள்ளனர். இறை யச்சமுள்ளவர்களும் சிறந்தவர்களும் குறைந்து போய்விட்டனர்.

இஸ்லாம் பெண்கள் அந்நிய ஆடவர்களுடன் கலந்துறவாடுவதையும் ஹராமாக்கி இருக் கிறது. இவையனைத்தும் பண்பாடுகள், சிறப்புக்கள், குடும்பங்கள் முதலியவற்றைப் பாது காப்பதற்காகும். குழப்பத்தின் வாசல்களையும் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வழிகளை யும் அடைப்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் இஸ்லாம் அக்கறை கொள்கிறது. பெ ண் வெளியே செல்வதால், அந்நிய ஆடவர்களுடன் கலந்துவிடுவதால், பர்தா முறையை மேற்கொள்ளாமலிருப்பதால் இச்சைகள் தூண்டப்படுகின்றன, தவறுக்கான காரணகாரியங் கள் எளிதாக்கப்படுவதோடு அவற்றை அடைவதும் இலேசாக்கப்படுகின்றது.

அல்லாஹ் கூறுகிறான்:(நபியின் மனைவியர்களே!) நீங்கள் உங்களின் வீடுகளிலேயே தங் கிவிடுங்கள். முன்னர் அறியாமைக் காலத்துப் பெண்கள் திரிந்ததைப் போன்று திரிந்து கொண்டிருக்காதீர்கள்.(33:33) நபி(ஸல்) அவர்களின் மனைவியரிடம் நீங்கள் ஏதாவது ஒன் றைக் கேட்பதாக இருந்தால் திரைமறைவிலிருந்து கேட்டுக் கொள்ளுங்கள்.(33:53)

ஆண்களும் பெண்களும் கலந்து விடுவதை நபி(ஸல்) அவர்கள் கண்டிப்பாகத் தடை செய்துள்ளார்கள். இன்னும் அப்படி கலந்துவிடுவதற்கு காரணமான அனைத்தையும்- வணக்க வழிபாடுகள் நடைபெறும் இடங்களிலும் கூட தடுத்துள்ளார்கள்.

ஒரு பெண் சில சந்தர்ப்பங்களில் தனது அவசியத் தேவைகளை நிறைவு செய்து கொ டுப்பவரில்லாதபோது தனது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கும் அல்லது தனக் கும் தனது குடும்பத்தினருக்கும் உணவைத் தேடிக்கொள்வதற்காக விற்பதற்கும் வாங்கு வதற்கும் அல்லது இதுபோன்ற அவசியத் தேவைகளுக்காக ஆண்களிருக்கும் இடத்திற்கு போகவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிவிடுகிறாள். இந்தச் சமயத்தில் அவள் மார்க்க வர ம்புகளைப் பேணி தனது அலங்காரத்தை வெளிப்படுத்தாமல் இஸ்லாமிய

முறைப்படி தன் னை மறைத்துக் கொண்டு வெளியேறி, ஆண்களை விட்டும் நீங்கி, அவர்களுடன் கலந்தி டாதவாறு சென்று வருவதில் குற்றமில்லை.

ஒருபெண் அந்நியருடன் தனித்திருப்பதை ஹராமாக்கியிருப்பது குடும்பத்தையும் பண்பா ட்டையும் பாதுகாப்பதற்கு இஸ்லாம் அமைத்துள்ள சிறந்த வழியாகும். நபி(ஸல்) அவர்கள் ஒரு பெண் தன்னுடைய கணவன் அல்லது அவள் மணம்முடித்துக் கொள்ள விலக்கப்பட் டவன் இல்லாதபோது அந்நிய ஆணுடன் அவள் தனித்திருப்பதைக் கடுமையாக எச்சரித்து ள்ளார்கள். ஏனெனில் நிச்சயமாக ஷைத்தான் உள்ளங்களையும் குணங்களையும் கெடுப் பதற்கு மிகவும் பேராசை உள்ளவனாக இருக்கின்றான்.

## மாதவிடாய், பிரசவ இரத்தத்தின் சட்டங்கள்

மாதவிடாயின் காலமும் அதன் வரையறையும்:

1- பெரும்பாலும் மாதவிலக்கு வரக்கூடிய காலம் 12 வயது முதல் 50 வயது வரையாகும். சிலசமயம் பெண்ணின் நிலை, அவளின் சுற்றுப் புறச்சூழலைப் பொறுத்து அதற்கு முன்ன ரோ பின்னரோ பலவிதத்தில் அவளுக்கு மாதவிடாய் வந்துவிடலாம்.

2- மாதவிடாயின் குறைந்த கால அளவிற்கும், அதன் கூடுதலுக்கும் வரையறை கிடையாது.

## கர்ப்பிணியின் உதிரப்போக்கு

ஒரு பெண் கர்ப்பமாகிவிட்டால் பெரும்பாலும் இரத்தம் நின்றுவிடும். எனினும் கர்ப்பம டைந்தவள் இரத்தத்தைக் கண்டால் அது குழந்தை பெறுவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன் பாக இருக்குமானால் அத்துடன் பிரசவ வலியும் இருந்தால் அது பிரசவ இரத்தமாகும். குழந்தை பெறுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னரோ அல்லது பிரசவ வலியின்றி குறை ந்த காலத்திற்கு முன்னரோ இரத்தத்தைக் கண்டால் அது பிரசவ இரத்தமுமல்ல மாதவி டாயுமல்ல. எனினும் குழந்தை பெறும் வரை நிற்காமல் தொடர்ந்து வந்து கொண்டிருந்தா ல் அது மாதவிடாய் இரத்தமாகும்.

## விதிவிலக்கான மாதவிடாய்

விதிவிலக்காக ஏற்படக்கூடிய மாதவிடாய் பலவகையாகும்:

1- அதிகமாகிவிடுவது அல்லது குறைந்துவிடுவது

உதாரணமாக வழமையாக ஆறு நாட்கள் வரக்கூடிய ஒரு பெண்ணுக்கு அது நீடித்து ஏழாவது நாளும் வருகிறது. அல்லது வழமையாக ஏழு நாட்கள் வரக்கூடியவள் ஆறு நாட்களிலேயே தூய்மையாகிவிடுகிறாள்.

2- முந்திவிடுவது அல்லது பிந்திவிடுவது

உதாரணமாக வழக்கமாக மாதக் கடைசியில் மாதவிடாய் வரக்கூடியவள் மாத ஆரம்ப த்திலேயே அதைக் கண்டு விடுகிறாள். அல்லது மாத ஆரம்பத்தில் வருவது பழக்கமாக உள்ளவள் மாத இறுதியில் அதைக் காண்கிறாள். எப்போது அவள் இரத்தத்தைக் காண் கிறாளோ அப்போதே அவள் மாதவிடாய்க்காரியாகிவிடுகிறாள். அதிலிருந்து எப்போது சுத்த மாகிவிடுகிறாளோ அப்போதே சுத்தமானவளாக ஆவிடுகிறாள். அது வழக்கத்தை விட அ திகமானாலும் சரி அல்லது குறைந்தாலும் சரி அல்லது முந்தினாலும் சரி பிந்தினாலும் சரி.

3- மஞ்சள் அல்லது கலங்கல் நிறம்

அதாவது காயத்திலிருந்து வரக்கூடிய சீழ் போன்று மஞ்சளாகவோ அல்லது மஞ்சளுக் கும் கருப்புக்கும் இடைப்பட்ட நிறமாகவோ இரத்தத்தைக் பார்க்கிறாள். அது மாதவிடாய் காலத்திலோ அல்லது சுத்தமாவதற்கு முன் மாதவிடாய்க் காலத்துடன் சேர்ந்தோ இருந் தால் அது மாதவிடாய்தான். அதற்கும் மாதவிடாய் சட்டங்கள்தான். சுத்தமான பிறகு இருந்தால் அது மாதவிடாய் அல்ல.

4- மாதவிடாய் நின்று நின்று வருவது

அதாவது ஒரு நாள் இரத்தத்தையும் ஒரு நாள் சுத்தத்தையும் காண்கிறாள் என்றால் இதுபோன்றவற்றிற்கு இரண்டு நிலைகள் உள்ளன.

முதல் நிலை: ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் விட்டு விட்டு வரும் நிலை எல்லா நேரத் திலும் நிரந்தரமாக இருந்தால் அது நோயினால் ஏற்படக்கூடிய தொடர் உதிரப்போக்கா

கும். இப்படிப்பட்ட பெண்ணுக்கு தொடர் உதிரப்போக்கிற்குரிய சட்டம்தான்.

இரண்டாம் நிலை: மாதவிடாய் விட்டு விட்டு வரும் நிலை நிரந்தரமாக இல்லாமல் சில நேரங்களில் வந்து பிறகு வழக்கமான சுத்த நிலை ஏற்படுதல். ஒரு நாளைவிடக் குறை வாக இரத்தம் வந்து நின்றுவிட்டால் அது சுத்த நிலையல்ல. ஆனால் ஒரு நாளை விடக் குறைவாக இரத்தம் வந்து நின்று விட்டாலும் அது சுத்தமான நிலை என்பதை உறுதிப்படு த்தும் அம்சங்களிருந்தால் அதாவது அவளது வழக்கமான மாதவிடாய் நாட்களின் இறுதி யில் இரத்தம் நின்று சுத்தம் ஏற்பட்டால் அல்லது இரத்தம் நிற்கும்போது வெண்மையான திரவம் கர்ப்பப்பையிலிருந்து வெளியேறினால் அது சுத்தமான நிலையேயாகும்.

மாதவிடாயின் சட்டங்கள்

**1- மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணுக்கு கடமையான, நஃபிலான தொழுகைகளைத் தொழுவ து ஹராமாகும். ஆனால் தொழுகை நேரத்தில் முழுமையாக ஒரு ரக்அத் தொழுவதற்குரி ய நேரம் அவளுக்குக் கிடைத்தால் அத்தொழுகையைத் தொழுவது அவள் மீது கடமை யாகும். அவளுக்கு கிடைத்த நேரம் தொழுகையின் ஆரம்ப நேரமாக இருந்தாலும் சரி அல்லது கடைசி நேரமாகயிருந்தாலும் சரி.**

**ஆரம்ப நேரத்திற்கு உதாரணம். அதாவது ஒரு பெணுக்கு சூரியன் மறைந்த பின் ஒரு ரக்அத்துக்கான நேர அளவு கடந்ததும் மாதவிடாய் வந்துவிடுகிறது. அவள் சுத்தாமான பின் மக்ரிப் தொழுகையை கழாச் செய்வது அவள் மீது கடமையாகும். ஏனெனில் மாதவி டாய் வரும் முன்பே அவள் ஒரு ரக்அத்தை அதற்குரிய நேரத்தில் அடைந்துவிட்டாள்.**

**கடைசி நேரத்திற்கு உதாரணம். அதாவது ஒரு பெண் சூரியன் உதயமாகு முன் ஒரு ரக்அத் தொழும் நேரத்தில் சுத்தமாகிவிட்டாள். இவளுக்கு சுபுஹு த் தொழுகையை கழாச் செய்வது கட்டாயமாகும். காரணம் ஒரு ரக்அத்திற்குரிய நேரத்தை இவள் அடைந்துவி ட்டதால்.**

**சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் போன்ற திக்ருகளையும், சாப்பிடும்போதும் மற்ற நேரத்திலும் பிஸ்மில்லாஹ் கூறுவதும், ஃபிக்ஹு , ஹதீஸ்களைப் படிப்பதும், துஆச் செய்வதும், குர்ஆனைக் கேட்பதும் மாதவிடாய்ப் பெண்ணுக்கு ஹராமா காது. மேலும் அவள் குர்ஆனைப் பார்த்தோ அல்லது நாவால் மொழியாமல் உள்ளத்தால் சிந்தித்து ஓதுவதிலோ குற்றமில்லை. உதாரணமாக குர்ஆனையோ அல்லது குர்ஆன் எழு தப்பட்ட பலகையையோ முன்னால் வைத்துக் கொண்டு மனதுக்குள் ஓதுவது போல.**

**மாதவிடாய்ப் பெண் தேவையுள்ள நேரம் தவிர மற்ற நேரங்களில் குர்ஆனை ஓதாமலி ருப்பது மிக்க நல்லது. தேவையுள்ள நேரமென்றால் அவள் மாணவிகளுக்குக் கற்றுக்கொ டுக்கின்ற ஆசிரியையாகவோ அல்லது தேர்வு நேரத்தில் தேர்வுக்காக பாடம் படிக்க வேண் டிய மாணவியாகவோ இருப்பது போன்றாகும். (மாதவிடாய்ப் பெண் குர்ஆனைத் தொடக் கூடாது, ஓதக்கூடாது என்பதில் அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன)**

**2- ஃபர்லான, சுன்னத்தான நோன்பு நோற்பது ஹராமாகும். அப்படியே அவள் நோன்பு நோற்றால் கூடாது. எனினும் ஃபர்லான நோன்பை அவள் கழாச் செய்ய வேண்டும். ஒரு பெண் நோன்பு நோற்றிருக்கும் சமயம் மாதவிடாய் வந்துவிட்டால் அந்நேரம் சூரியன் மறை வதற்கு ஒரு வினாடிக்கு முன்பாக இருந்தாலும் நோன்பு முறிந்து போய்விடும். அது ஃபர் லான நோன்பாகயிருந்தால் அதைக் கழாச் செய்வது கட்டாயமாகும்.**

**ஒரு பெண் சூரியன் மறையும் முன் மாதவிடாய் வருவதாக உணர்ந்தாள். ஆனாலும் சூரி யன் மறைந்த பின்புதான் அது வெளியானது. இந்நேரத்தில் அவளின் நோன்பு பூரணமாகி விடும். ஒரு மாதவிடாய்க்காரி பஜ்ர் உதயமாகி**

ஒரு வினாடிக்குப் பின் சுத்தமாகி நோன்பு நோற்றால் அவளின் நோன்பு செல்லாது. பஜ்ர் உதயமாகுவதற்கு சிறிது நேரத்திற்கு முன் அவள் சுத்தமாகி நோன்பு நோற்றால் அது நிறைவேறிவிடும். பஜ்ருக்குப் பிறகே அவள் குளித்திருந்தாலும் சரி.

3- தவா∴ப்(வலம்வருதல்): மாதவிடாய்க்காரி க∴பத்துல்லாவில் ∴பர்லான, ந∴பிலான தவா∴ப் செய்வது ஹராமாகும். அப்படி தவா∴ப் செய்தால் அது கூடாது. ஸ∴பா, மர்வாவிற்கிடை யே ஓடுவது, அர∴பாவிலே தங்குவது, முஸ்தலி∴பா, மினாவில் இரவு தங்குதல், கல்லெறி தல் போன்ற ஹஜ், உம்ராவின் ஏனைய செயல்கள் அவளுக்கு ஹராமல்ல. இந்த அடிப்ப டையில் ஒரு பெண் சுத்தமானவளாக தவா∴ப் செய்து முடித்த பின்னாலோ அல்லது ஸ∴ பா, மர்வாவிற்கிடையே ஓடிக் கொண்டிருக்கும்போதோ மாதவிடாய் வந்து விட்டால் அதில் எந்த பிரச்சனையும் கிடையாது.

4- பள்ளியில் தங்குதல்: மாதவிடாய்க்காரி பள்ளியில் தங்கியிருப்பது ஹராமாகும்.

5- உடலுறவு கொள்ளுதல்: மாதவிடாயின்போது மனைவியிடம் கணவன் உடலுறவு கொள்வதும், அதற்காக அவள் சம்மதிப்பதும் ஹராமாகும். உடலுறவைத் தவிர தனது இச்சையைத் தணிக்கக் கூடிய முத்தமிடுதல், கட்டியணைத்தல், மர்ம உறுப்பு அல்லாததி ல் சுகம் அனுபவித்தல் போன்றவை அவனுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

6- தலாக்: மாதவிடாய் ஏற்பட்டிருக்கும்போது தனது மனைவியை கணவன் தலாக் சொ ல்வது ஹராமாகும். அவ்வாறு சொல்லிவிட்டால் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் அவன் மாறுசெய்து விட்டவனாவான்,ஹராமைச் செய்தவனாவான். இந்நேரத்தில் அவளை அவன் மீட்டிக் கொள்வதும், சுத்தமாகும் வரை அவளை தன்னுடன் வைத்துக் கொள்வ தும் கட்டாயமாகும். பிறகு அவன் விரும்பினால் அவளைத் தலாக் சொல்லிக் கொள்ள லாம். அவளுக்கு இரண்டாம் முறை மாதவிடாய் ஏற்படும் வரை விட்டுவிடுவது மிகவும் நல் லது. அவள் சுத்தமாகிவிட்டால் அவன் விரும்பினால் அவளை தன்னுடன் வைத்துக் கொ ள்ளலாம், விரும்பினால் தலாக் விடவும் செய்யலாம்.

7- குளிப்பது கடமை: மாதவிடாய்க்காரி சுத்தமாகிவிட்டால் உடலின் எல்லாப் பகுதியையும்

சுத்தப்படுத்திக் குளிப்பது கடமையாகும். தலை முடியின் அடிப்பாகத்திற்குத் தண்ணீர் சே ராதென பயப்படுமளவிற்கு அழுத்தமான முறையில் கட்டப்பட்டிருந்தாலே தவிர அவளின் தலை முடியை அவிழ்த்துவிடுவது கட்டாயமில்லை.

மாதவிடாய்க்காரி தொழுகைக்குரிய நேரத்திலேயே சுத்தமாகிவிட்டால் தொழுகையை அதற்குரிய நேரத்தில் அடைந்து கொள்வதற்காக விரைவாக குளிப்பது கட்டாயமாகும். அவள் பயணத்திலிருக்கும்போது அவளிடம் தண்ணீர் இல்லையென்றால் அல்லது அவளு டன் தண்ணீர் இருந்து அதைப் பயன்படுத்துவதால் இடையூறு ஏற்படுமெனப் பயந்தால் அல்லது தண்ணீர் அவளுக்கு இடையூறளிக்கும் வியாதியுடையவளாக இருந்தால் தடை நீங்கும் வரை குளிப்பதற்குப் பகரமாக தயம்மும் செய்து கொள்ள வேண்டும். தடை நீங் கிய பின் குளித்துக் கொள்ள வேண்டும்.

**தொடர் உதிரப்போக்கும் அதன் சட்டங்களும்**

**தொடர் உதிரப்போக்கு என்பது ஒரு பெண்ணுக்கு இரத்தம் ஒரு போதும் நிற்காமல் தொடர்ந்து வருவதாகும். அல்லது மாதத்தில் ஓரிரு நாட்கள் போன்ற குறைந்த கால அளவு அது நின்றுவிடுவதாகும். அவளின் வழக்கத்திற்கு மாறாக பதினைந்து நாட்களுக் கு மேல் வந்தால் அதற்கும் தொடர் உதிரப்போக்கு எனக் கூறப்படுகின்றது. தொடர் உதிரப்போக்கு உடையவளுக்கு மூன்று நிலைகள் உள்ளன:**

**1- இவ்வுதிரப்போக்கு வருமுன் அவளுக்கு இயற்கையாக வந்துகொண்டிருந்த மாதவிடாய் காலத்ததைத் தெரிந்திருக்க வேண்டும். அக்காலம் வரும்போது அவள் மாதவிடாய்க்காரிதா ன். அக்காலங்களில் அவளுக்கு மாதவிடாயினுடைய சட்டங்களே. மற்ற நேரங்களில் அவ ள் தொடர் உதிரப்போக்குடையவள்.**

**இதற்கு உதாரணம்: ஒரு பெண்ணுக்கு ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் ஆறு நாட்கள் மாதவிடாய் வருகின்றது. பிறகு அவளுக்கு தொடர் உதிரப்போக்கு ஏற்பட்டு நிரந்தரமாகி விடுகிறது. இப்போது அவளுக்கு ஒவ்வொரு மாதத்திலும் ஆரம்பத்திலுள்ள ஆறு நாட்கள் மாதவிடாய் நாட்களாகும். மற்ற நாட்கள் தொடர் உதிரப்போக்குடைய நாட்களாகும். இதன்படி தொடர் உதிரப்போக்குடையவள் அவளுடைய மாதவிடாய்க் காலத்தில் மாதவி டாய்க்காரியாக இருந்துவிட்டு அதன் பின்னர் குளித்து, தொழுது கொள்ளவேண்டும். தொ டர்ந்து வரக்கூடிய இரத்தத்தை அவள் பொருட்படுத்த வேண்டியதில்லை.**

**2- ஒரு பெண் முதன் முதலில் எப்போது இரத்தத்தைக் காண்கிறாளோ அப்போதிருந்தே அவளுக்கு தொடர் உதிரப்போக்கு தான் என்றால் இப்படிப்பட்ட பெண் மாதவிடாய் இரத் தம் எது? தொடர் உதிரப்போக்கு எது? என்பதைப் பிரித்தறிந்து செயல்பட்டுக் கொள்ள வேண்டும். மாதவிடாய் இரத்தமாக இருந்தால் அது கருப்பாக அல்லது கட்டியாக அல்ல து வாடையுள்ளதாக இருக்கும். இதல்லாத தன்மையிலிருந்தால் அது தொடர் உதிரப்போ க்கு என விளங்கிக் கொள்ள வேண்டும்.**

**உதாரணமாக, ஒரு பெண் முதன் முதலில் இரத்தத்தைப் பார்க்கும்போது அது தொட ர்ந்து வருவதைக் காண்கிறாள். ஆனால் மாதத்தில் பத்து நாட்கள் கருப்பாகவும், மீதி நாட்களில் சிகப்பாவும் காண்கிறாள் அல்லது பத்து நாட்கள் கட்டியாகவும், மீதி நாட்களி ல் இலேசாகவும் காண்கிறாள் அல்லது பத்து நாட்கள் வாடையுடனும், மீதி நாட்களில் வா டையில்லாமலும் காண்கிறாள். இவ்வாறிருந்தால் அவளின் மாதவிடாய் இரத்தம் முந்திய உதாரணத்தில் கருப்பானதும், இரண்டாவது உதாரணத்தில் கட்டியானதும், மூன்றாவதில் வாடையுடையதாகவும் ஆகும். மற்ற தன்மையிலுள்ளது தொடர் உதிரப்போக்காகும்.**

**3- தொடர் உதிரப்போக்கு அவள் இரத்தத்தைப் பார்த்த ஆரம்ப காலத்திலிருந்தே தொட ர்ந்து வந்துகொண்டிருக்கிறது. மாதவிடாய் இரத்தம்**

எது? தொடர் உதிரப்போக்கு எது? என பிரித்தறிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவளின் இரத்தம் ஒரே தன்மையிலோ அல்லது குழப்பமான தன்மைகளிலிலோ இருந்தால் இப்படிப்பட்டவள் பெரும்பாலான பெண் களின் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும். இவளுடைய மாத விடாய்க் காலம் ஒவ்வொரு மாதத்திலும் ஆறு அல்லது ஏழு நாட்களாகும். இதன் ஆரம்ப ம் அவள் இரத்தத்தைப் பார்த்த ஆரம்ப நாளிலிருந்து துவங்குகிறது. மற்ற நாட்கள் தொ டர் உதிரப்போக்குடைய நாட்களாகும்.

## தொடர் உதிரப்போக்கின் சட்டங்கள்

தொடர் உதிரப்போக்கின் சட்டம் சுத்தத்தின் சட்டத்தைப் போன்று தான். தொடர் உதிரப்போக்குடைய பெண்களுக்கும் சுத்தமுடனுள்ள பெண்களுக்குமிடையே எந்த வித்தி யாசமுமில்லை பின் வரும் இரண்டு விஷயங்களைத் தவிர.

1- தொடர் உதிரப்போக்குடையவள் ஒவ்வொரு தொழுகைக்கும் ஒலுச் செய்வது கட்டாய மாகும்.

2- அவள் ஒலுச் செய்ய விரும்பினால் இரத்தத்தின் அடையாளத்தைக் கழுவிக் கொள்ள வேண்டும். இரத்தம் நிற்பதற்காக ஒரு துண்டுத் துணியை மறைவிடத்தின் மீது கட்டிக் கொள்ள வேண்டும்.

## பிரசவ இரத்தமும் அதன் சட்டமும்

பிரசவ இரத்தமென்பது குழந்தை பிறந்த காரணத்தால் கர்ப்பப்பையிலிருந்து வெளியே றுகின்ற இரத்தமாகும். இது பிரசவித்தவுடன் வரும். அல்லது அதற்குப் பிறகும் அல்லது பிரசவத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னால் பிரசவ வலியுடன் வரும். இந்த இரத்தம் எப்போது நின்றுவிடுகிறதோ அப்போதே அவள் சுத்தமாகிவிடுகிறாள். நாற் பது நாட்களை விட அதிகமாகி விட்டால் நாற்பதுக்குப் பின்னர் குளித்துவிட வேண்டும். ஏனெனில் அதுதான் பிரசவ இரத்தத்திற்குரிய கூடுதலான கால அளவாகும். இரத்தம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தாலும் சரியே. எனினும் நாற்பது நாட்களைவிட அதிகமா க வருவது மாதவிடாய் இரத்தமாக இருந்தால் அதிலிருந்து சுத்தமாகும் வரை மாதவிடாய் க்காரியாக இருந்துவிட்டு பிறகு குளித்துக் கொள்ள வேண்டும்.

மனிதத் தோற்றம் தெளிவாகும் முறையில் முழுக் குழந்தையாக அவள் பெற்றெடுத்தால் தான் அது பிரசவ இரத்தமாகக் கருதப்படும். மனிதனின் தோற்றம் தெளிவாக இல்லாத சிறிய சதைக் கட்டியைப் பெற்றெடுத்தால் அந்த இரத்தம் பிரசவ இரத்தமல்ல. மாறாக அது நரம்புத் தளர்ச்சியின் இரத்தமாகும். இவளுக்குரிய சட்டம் தொடர் உதிரப்போக்கு டையவளின் சட்டமாகும். பிரசவ இரத்தின் மிகக் குறைந்த கால அளவு எண்பது நாட்க

ளாகும். அதிகபட்ச அளவு தொன்னூறு நாட்களாகும். பிரசவ இரத்தத்திற்குரிய சட்டங்க ள் முன்னால் கூறப்பட்ட மாதவிடாய்க்குரிய சட்டங்கள் போன்றுதான்.

**மாதவிடாயைத் தடுத்து நிறுத்தக்கூடியவை**

ஒரு பெண் இரு நிபந்தனைகளுடன் மாதவிடாயைத் தடுத்து நிறுத்தக்கூடியவற்றை பயன்படுத்துவது கூடும்.

1- தனக்கு இடையூறு ஏற்படுமெனப் பயப்படாமலிருக்க வேண்டும். இடையூறைப் பயந் தால் கூடாது.

2- உடலுறவுக்கு இடைஞ்சலாக இருக்குமானால் கணவனிடம் அனுமதி பெற வேண்டும்.

மாதவிடாய் வரவழைக்கக்கூடியவற்றைப் பயன்படுத்துவது இரு நிபந்தனைகளுடன் கூடும்.

1- கணவனின் அனுமதி.

2- கடமைகளை விட்டும் தப்புவதற்கான தந்திரமாக இல்லாமலிருக்க வேண்டும். உதார ணமாக தொழுகை, நோன்பு போன்றவற்றை விட்டுவிடுவதற்காக இதைப் பயன்படுத்துவது போல.

கருத்தரித்தலைத் தடுக்கக்கூடியவற்றைப் பயன்படுத்துவது இரு வகைகளாகும்.

1- நிரந்தரமாகத் தடை செய்வது. இது கூடாததாகும்.

2- குறிப்பிட்ட காலம் வரை தற்காலிமாகத் தடை செய்வது. ஒரு பெண் அடிக்கடி கர்ப்ப மாகக் கூடியவளாக இருந்து அது அவளுக்கு சிரமமாக இருந்தால் இரண்டாண்டுக்கு ஒரு முறை அல்லது அதுபோல ஒரு குறிப்பிட்ட காலத்திலோ கர்ப்பமாவதை விரும்புகிறாள் என் றால் இது கூடும். இதற்கு தனது கணவனின் அனுமதியும், அதனால் அவளுக்கு இடையூ றில்லாமலிருப்பதும் நிபந்தனையாகும்.